# DEPARTMENTAL EXAMINATIONS - MAY 2018

## 104 - The Tamil Nadu Forest Department Codes and Accounts

## (Without Books)

(1) மாறுதல் பயணப்பட்டியலில் அரசு பணியாளர் ஒருவர் சொந்த கார் மூலமாக பயணம் மேற்கொண்டால் அனுமதிக்கப்படும் தூரப்பயணப்படி 1 கி.மீ.க்கு எவ்வளவு?

விடை: ரூ.8.00

(2) கண்டனம், அபராதம், பணப்பிடித்தம் போன்ற தண்டனைகள் தேர்வு நிலை வழங்குவதை பாதிக்குமா?

விடை: இல்லை

(3) விடுப்பில் இருக்கும் ஒருவர் அரசு பணிக்காக பயணம் செய்ய நேர்ந்தால் அவர் பயணப்படி பெற தகுதி உடையவரா

விடை: ஆம்

(4) ஒரு அரசுப்பணியாளர் முழு ஓய்வூதியம் பெறுவதற்கு சராசரி பணிக்காலம்?

விடை: 60 அரையாண்டுகள்

(5) ஓய்வூதியத்திற்கு தகுதியான பணிக்காலங்கள்

விடை: அனைத்து பணிகளும் தற்காலிகம் (அ) நிரந்தரம்

(6) பணிக்கொடை வழங்குவதற்கு கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய ஊதியம்

விடை: அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி

(7) வன முன்பணம் பெறுவதில் வனச்சரக அலுவலருக்கு அதிகபட்ச அதிகார வரம்பு எவ்வளவு?

விடை: ரூ. 50,000/-

(8) 25 ஆண்டுகள் பணிபுரிந்து தன் விருப்ப ஓய்வில் செல்லும் பணியாளர்களுக்கு சிறப்பு உயர்வு வழங்குதல் ?

விடை: 5 ஆண்டுகள்

(9) கட்டாய ஓய்வு பெற உத்தரவிடப்பட்ட அரசு ஊழியர்களுக்கு சிறப்பு உயர்வுக்கான தகுதி உள்ளதா?

விடை: இல்லை

(10) பயணப்பட்டியலில் Flate Rate அதிகபட்சம் எவ்வளவு அனுமதிக்கலாம்?

விடை: 4

(11) வனவரின் கட்டுப்பாட்டிற்குள் வருவது

விடை: வன பிரிவு

(12) மாவட்ட வன அலுவலர் மதிப்பீடு ஒப்பளிப்பு செய்ய எவ்வளவு நிதி அதிகாரம் படைத்தவர்

விடை: ரூ. 6 லட்சம் வரை

(13) அரசு கட்டிடங்களை விற்பனை செய்ய அதிகாரம் பெற்றவர்

விடை: முதன்மை நிர்வாக பொறியாளர்

(14) அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டும் கடன் எப்போது வழங்கப்படும்

விடை: 10 வருடம்

(15) முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு அதிகாரிகளின் வீடு கட்டும் முன்பணத்தின் வட்டியினை எத்தனை ஆண்டுகளில் வசூல் செய்ய வேண்டும்.

விடை: 5 வருடம்

(16) அரசு வாகனத்தை வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு 8 கி.மீ. தூரத்திற்குள் பயன்படுத்தும் அதிகாரி, பெறும் மாதத் தொகை

விடை: ரூ.75

(17) தொழில் நுட்ப அதிகாரியாக அறிவிக்கப்பட்டவர் யார்?

விடை: மாநில சாலை போக்குவரத்து அலுவலர்

(18) கடைநிலை ஊழியர்கள் அடிப்படை பணியாளர்கள் 5 ஆண்டுகள் பணி முடிக்காதவர்களுக்கு எத்தனை நாட்கள் ஈட்டிய விடுப்பு கணக்கிடப்பட வேண்டும்

விடை: 2.5 நாட்கள்

(19) திரன்விளைவுடன் (Cumulative Effect) ஊதிய உயர்வு ஒத்திவைக்கப்பட்டால் ஏற்படும் விளைவு

விடை: ஓய்வு பெறும் வரை நிதி இழப்பு ஏற்படும்

(20) திரன்விளைவின்றி ஊதிய உயர்வு ஒத்திவைக்கப்பட்டால் தண்டனை காலத்தில் விடுப்பு எடுத்தால் ஊதிய உயர்வு தள்ளிபோகுமா?

விடை: ஆம்

(21) 10 ஆண்டுகள் வரை பணிபுரிந்த அரசு ஊழியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மருத்துவச் சான்றின்பேரில் ஈட்டா விடுப்பு

விடை: 270 நாட்கள்

(22) முழுப்பணிக்கொடை வழங்குவதற்கான தகுதியுள்ள அரையாண்டுகள்

விடை: 66 அரையாண்டுகள்

(23) தற்காலிக பணிநீக்க காலத்தில் உள்ள பணியாளருக்கு வழங்கப்படும் படிகளில் கீழ்கண்ட படி பெற தகுதியில்லை

விடை: மருத்துவப்படி



www.thamizhforest.com

(24) வனத்துறை நிர்வாக அமைப்பின் கட்டுப்பாட்டு பிரிவின் அலுவலர்

விடை: வன சரக அலுவலர்

(25) சம்பளப்பட்டியல் எவ்வளவு ஆண்டு பராமரிக்க வேண்டும்?

விடை: 35 வருடம்

(26) வருடாந்திர பணியாளர் பட்டியல் எப்பொழுது தயார் செய்ய வேண்டும்?

விடை: ஜனவரி 1

(27) வன தரவிலை நிர்ணயம் செய்ய அதிகாரம் படைத்தவர்

விடை: வனப்பாதுகாவலர்

(28) வேலைக்காக பிடித்தம் செய்யப்படும் உத்தரவாத தொகை வேலை முடிந்த பிறகு எப்பொழுது விடுவிக்க வேண்டும்?

விடை: 1 வருடம்

(29) புதியதாக வனக்கிடங்கு ஏற்படுத்த அனுமதி வழங்க அதிகாரம் பெற்றவர்

விடை: வனப்பாதுகாவலர்

(30) படிவம் H எத்தனை பிரதிகளை கொண்டது

விடை: ஐந்து பிரதிகள்

(31) ஐந்தாண்டு அறிக்கை (Quinquennial Report) எப்போது சமர்ப்பிக்க வேண்டும்?

விடை:

(32) அரசு ஆயுதங்கள் ஏதேனும் இழப்பு அல்லது பழுது ஆனதை விசாரிக்க அமைக்கப்படும் குழுவில் எத்தனை உறுப்பினர்கள் இடம்பெறுவர்

விடை: 3 உறுப்பினர்கள்

(33) வேலை உத்தேசமாக ஆரம்பிக்கும் நாளிலிருந்து, எத்தனை நாட்களுக்கு முன்னர் ஒப்பந்த புள்ளி (Tender) அழைப்பு விடவேண்டும்.

விடை: தொண்ணூறு நாட்கள்

(34) ஒரு பணியினை துறை மேற்கொள்ள எத்தனை முறை ஒப்பந்த புள்ளி (Tender) அழைப்பு விட வேண்டும்.

விடை: 2 முறை

(35) தணிக்கை அதிகாரி, எப்பொழுது கிடங்குகளை தணிக்கை செய்ய வேண்டும்

விடை: ஒரு வருடத்திற்கு ஒரு முறை

www.thamizhforest.com

(36) வனச்சரக அலுவலர் கிடங்கினை தணிக்கை செய்வது

விடை: ஆறு மாதத்திற்கு ஒரு முறை

(37) எந்த படிவத்தில் வனக்குற்றம் அறிக்கை செய்யப்படும்

விடை: படிவம் A

(38) எந்த படிவத்தில் நீதிமன்ற நடுவர் வன வழக்கின் முடிவினை தெரிவிப்பார்?

விடை: படிவம் E

(39) எந்த படிவம் இணக்க கட்டணம் செலுத்த பயன்படும்

விடை: படிவம் C

(40) நீதிமன்ற நடுவர் அவர்களுக்கு படிவம் A-னை எத்தனை நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

விடை: ஆறு மாதங்கள்

(41) வன எல்லை மற்றும்ட வன சாலைகளை மாற்றி அமைக்கும் அதிகாரம் பெற்றவர் யார்?

விடை: மாவட்ட வன அலுவலர்

(42) ஆண்டு வனத்திட்டம்/ஆண்டு செயல்திட்டம் (Annual Plan of Operation) தயார் செய்பவர் யார்?

விடை: மாவட்ட வன அலுவலர்

(43) ஆண்டு வனத்திட்டம் / ஆண்டு செயல்திட்டம் எப்பொழுது சமர்ப்பிக்க வேண்டும்?

விடை: பட்ஜெட்டுக்கு முன்

(44) வனச்செயல்திட்டம் (Working Plan) ஒப்பளிப்பவர் யார்?

விடை: முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

(45) மரக்கணக்கில் படிவம் 5 என்பது

விடை: வரவு மற்றும் செலவு மரக்கணக்கு மற்றும் இதர பொருட்கள்

(46) மரக்கணக்கில் படிவம் 6 என்பது

விடை: விற்பனை செய்த மரம் மற்றும் இதர பொருட்கள்

(47) கால்நடைகள் (Live Stock of Forest) பராமரிப்பு செய்வதை குறிப்பிடும் படிவம் எது?

விடை: படிவம் 14

(48) கட்டிட பதிவேட்டினை பராமரிப்பவர் யார்?

விடை: மாவட்ட வன அலுவலர்

(49) இணக்க கட்டணம் ஒப்பளிப்பு செய்யும் அதிகாரம் யாரிடம் உள்ளது?

விடை: தலைமை வனப்பாதுகாவலர்

(50) மாவட்ட வன அலுவலகம் / வனப்பாதுகாவலர் அலுவலகங்களில் உள்ள அனைத்து பதிவேடுகளும் எதன் அடிப்படையில் பராமரிக்கப்படுகிறது

விடை: மாவட்ட அலுவலக கையேடு

(51) வனக்குத்தகைதாரர் ஆக எவ்வளவு தொகை செலுத்த வேண்டும்?

விடை: ரூ.3150/-

(52) வன குத்தகைதாரரின் குத்தகை காலம், எந்த ஆண்டில் கணக்கிடப்படுகிறது

விடை: காலண்டர் ஆண்டு

(53) நிலையான அளவு சுவடியினை (SMB) எந்த அலுவலகத்தில் பராமரிக்கப்படுகிறது.

விடை: மாவட்ட வன அலுவலகம்

(54) MAS பதிவேடு யாரால் பராமரிக்கப்படுகிறது

விடை: மாவட்ட வன அலுவலர்

(55) மாவட்ட கருவூலகத்தை கட்டுப்படுத்துவது யார்?

விடை: மாநில கணக்காயர்

(56) கீழ்கண்ட எந்த படிவத்தில் ஒரு நபர் பணம் செலுத்துவார்

விடை: செல்லான்

(57) கீழ்கண்டவைகளில் யாருடைய அனுமதியின்றி அரசு பணத்தை எடுக்க இயலாது

விடை: கருவூலக அலுவலர்

(58) யார் சைபர் குறியீடு திருத்தங்கள் மற்றும் விநியோகிக்கப்படும் சிக்னல் புத்தகத்தை சரிபார்க்க வேண்டும்

விடை: நாணய அதிகாரி

(59) மாவட்ட ஆட்சியர் எப்போது கருவூலகத்தை ஆய்வு செய்வார்

விடை: ஒரு வருடத்திற்கு ஒரு முறை

(60) செல்லான் எந்த வகை படிவத்தை சார்ந்தது

விடை: படிவம் 9

(61) பணம் செலுத்தும் செல்லான் எந்த வகையை சார்ந்தது

விடை: மூன்று பிரதிகள்

(62) அரசு அஞ்சல் வில்லை எங்கிருந்து பெறப்படும்

விடை: கருவூலகம்

(63) ஓய்வூதியத்தினை ஒரு கருவூலத்திலிருந்து மற்றொரு கருவூலகத்திற்கு மாற்ற யார் அதிகாரம் பெற்றவர்?

விடை:

(64) ஊதிய உயர்வுக்கு தகுதியுள்ள பணிக்காலங்கள்

விடை: பணியேற்பிடை காலம்

(65) தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை கீழ்கண்ட பணிக்காலங்கள் கணக்கிடப்படும்

விடை: தற்காலிக பணி நீக்க காலம், பணி இறக்க காலம், மருத்துவ சான்று இன்றி அசாதாரண விடுப்பு

(66) சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பிற்கு அனுமதிக்கப்பட்ட ஊதியம்

விடை: ஊதியத்தில் பாதியும் படிகள் முழுவதும்

(67) தினப்படியில் அனுமதிக்கப்படும் இடைநிகழ்வுசெலவு அனுமதிக்கப்பட்ட தூர அளவு

விடை: 160 கி.மீ.

(68) தலைமையிடத்தில் இல்லாத காலத்தில் ஆறு மணிவரை பயணம் மேற்கொண்ட தினப்படி அளவு

விடை: 30%

(69) அரசு வாகனத்தில் சென்றால் கீழ்கண்ட படிகளும் அடங்கும்

விடை: தினப்படி

(70) புதியதாக வனச்சரகங்களை உருவாக்கும் அதிகாரம் பெற்றவர்

விடை: அரசு செயலாளர்

(71) வனத்துறையில் தற்காலிக பணி நியமனங்களை செய்ய அதிகாரம் பெற்றவர்

விடை: முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

(72) ஒரு மாதத்திற்கான விவசாய சோதனை சாகுபடிக்கான நிதி

விடை: ரூ. 300

(73) புத்தகங்கள் மற்றும் வரைபடங்கள் மற்றும் உயர்நிலை பள்ளிகளுக்கான வருடாந்திர நிதி செலவு

விடை: ரூ. 3000

(74) வருடாந்திர அலுவலகத்தில் தளவாடங்கள் வாங்குவதற்கான நிதி உச்ச வரம்பு

விடை: ரூ. 10000

(75) ஒரு வருடத்தில் குடியிருப்பு கட்டடத்திற்கு கட்டுமானத்தின் பழுது செய்யப்படுவதற்கும் நிதி உச்ச வரம்பு

விடை: ரூ. 25000

(76) வனத்திட்டத்தால் சேர்க்கப்பட்ட தனிப்பட்ட வேலைகள் ஏற்கனவே அரசாங்க ஒப்புதலுக்கான அதிகாரங்கள் பெற்ற நிதி உச்ச வரம்பு

விடை: ரூ. 5 லட்சம்

(77) வனவரின் நாட்குறிப்பு என்பது

விடை: வாரந்தோறும்

(78) கடன் மற்றும் முன்பணம் வழங்கும் அதிகாரம் பெற்றவர்

விடை: முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்

(79) அனுபவிக்காத பணியேற்பிடை காலம் ஈட்டிய விடுப்பில் வரவு வைக்க எத்தனை மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்

விடை: 6 மாதம்

(80) மாறுதல் பயணப்பட்டியலில் நிலை 1 அலுவலர்களுக்கும் 60 கி.மீ. க்கு மேல் அனுமதிக்கப்பட்ட ஒட்டுமொத்தப்படி

விடை: ரூ.1800

------

www.thamizhforest.com